# எங்கள் நபி

மக்கா புனித நகரினிலே
மாநபி முஹம்மத் பிறந்தார்கள்
மாண்புறு மதீனா நகரினிலே
மாநபி முஹம்மத் மறைந்தார்கள்.

நபியின் தந்தை அப்துல்லாஹ்
நபியின் தாயார் ஆமினா
நபிகள் உண்மை பேசியதால்
ஸாதிக் என்றே அழைத்தார்கள்.

நம்பிக்கை கொள்ளும் மனிதராக
நபிகள் வாழ்ந்த காரணத்தால்
அல் அமீன் என்றே அழைத்தார்கள்
அன்புடன் நபியைப் புகழ்ந்தார்கள்.

# ஸலவாத்துச் சொல்லுவோம்

صَلَّى اللّٰهُ عَلَى مُحَمَّدٍ


صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

பாடம் 23


# அல்-குர் ஆன்




அல்-குர் ஆன் அல்லாஹ்வின் கலாமாகும்.

அதுவே எமக்கு வழிகாட்டி.

அல்-குர்ஆனை ஓதுவதைக் கேட்போம்.





அல்-குர்ஆனை ஓதுவோம்.

اَللّٰهُ رَبُّنَا

مُحَمَّدٌ نَبِيُّنَا

اَلْقُرْآنُ كِتَابُنَا

اَلْاِسْلَامُ دِيْنُنَا

அல்லாஹு ரப்புனா
முஹம்மதுந் நபிய்யுனா
அல் குர்ஆனு கிதாபுனா
அல் இஸ்லாமு தீனுனா.

பாடம் 26

# மஸ்ஜித்

## மஸ்ஜிதுக்குச் செல்வோம்:



அல்லாஹ்வைத் தொழுவோம்.